**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 88 of 2023

**பி.சா.1 ராஜு இன்று 23.06.2026 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**குறுக்கு விசாரணை :**

தாவா சொத்து B.H.ஜோகி என்பவருக்கு சொந்தமானதா என்றால் இல்லை, என் தாத்தா ஹாலாகௌடருக்கு பாத்தியப்பட்டிருந்தது. என்னுடைய எதிர்வழக்குரை பத்தி 2ல் தாவா சொத்து B.H.ஜோகி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. B.H.ஜோகிக்கு சுந்தரியம்மாள் மனைவி என்பதும், தீபா, மகேந்திரன், நவநீதன் ஆகியோர் அவர்களின் குழந்தைகள் என்பதும் சரி. தாவா சொத்தை பொறுத்து வாதிகள் குழந்தைகளாக இருந்தபோது சுந்தரியம்மாளிடம் கிரைய பத்திரம் பெற்றேன் என்பது சரி. வாதிகள் தாங்கள் மைனராக இருந்ததால் தங்களை அந்த கிரையம் கட்டுப்படுத்தாது என்று O.S.225/1998 என்ற வழக்கை உதகமண்டலம், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றும், அது தனக்கு சாதகமாக தீர்ப்பானது என்றும் கூறுகிறார். அதன் பேரில் இந்த வாதிகள் உதகை மாவட்ட நீதிமன்றத்தில் A.S.29/2004 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகுதான் அந்த விவரம் தெரியவந்தது, அந்த

மேல்முறையீட்டில் எனக்கு எந்த நோட்டிசும் வரவில்லை. நான் கூறுவது தவறு என்றும், நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலேயே வாதிகளுக்கு ஆதரவாக A.S.29/2004 மேல் முறையீடு தீர்ப்பானதாக கூறிவிட்டு நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் A.S.29/2004 மேல்முறையீடு தீர்ப்புரையின்பேரில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் அவ்வாறு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக கேள்விப்பட்டு நீதிமன்றத்தில் வந்து ஆவணங்களை பார்த்தபோதுதான் எனக்கு நோட்டிஸ் வரவில்லை என்பதை தெரிந்து பிறகு A.S.29/2004 தீர்ப்புரையினை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். அதன் மேல்முறையீடு எண் S.A.572/2005 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உயர் நீதிமன்றத்தில் நான் வழக்கறிஞரை வைத்து ஆஜரானேன் என்பது சரி. அந்த மேல்முறையீடு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்பது சரி. நான் அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தேனா என்றால் ஆமாம். அங்கு எங்கள் மேல்முறையீட்டை கோப்பிற்கு எடுக்க இயலாது என்று முடிவு செய்து உத்தரவிடப்பட்டது என்பது சரி. எனவே மேற்படி தீர்ப்பின்படி தாவா சொத்தில் வாதிகளுக்கு ¾ பாகம் உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், அதை ஆட்சேபிக்க எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் தவறு. எனவே

வாதிகளுக்கு தாவா சொத்தில் ¾ பாகம் உள்ளது என அந்த வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டதால் அதன்படி நான் நடந்து கொள்ளாததால் வாதிகள் தங்களுக்கு உரிய மேற்படி பாகத்தை பொறுத்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்றால் தவறு.

**மறு விசாரணை** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.06.21 15:07:17 +0530